# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032**
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),**

********

மனு எண்: 1564/2017/பே.2
ஆணை நாள். 17–12–2018

பேரூராட்சி செயல் அலுவலர்,
கன்னியாகுமரி சிறப்பு நிலை பேரூராட்சி; -- அறிக்கையின் அடிப்படையில் முறையீடாக
கன்னியாகுமரி. பதிவு செய்யப்பட்டது .

ஆணை.

கன்னியாகுமரி மாவட்டம், கன்னியாகுமரி பேரூராட்சியில், பேரூராட்சிக்குட்பட்ட காமராஜர் மணி மண்டபம் எதிரிலுள்ள கட்டண கழிப்பறை, நகரிய தங்கும் விடுதி, மற்றும் அதன் அருகில் உள்ள சிற்றுண்டிக்கடை ஆகியவை ஏலம் விடப்பட்டது தொடர்பாக திரு.அருள்ரெயான்ஸ், முறையீட்டு மனுதாரரின், முறையீட்டு மனு தொடர்பாக இம்முறைமன்ற நடுவத்தால் பிறப்பிக்கப்பட்ட ஆணை எண்.232/2017/நாள் 14.09.2017 க்கான கன்னியாகுமரி மாவட்டம், கன்னியாகுமரி சிறப்பு நிலை பேரூராட்சி செயல் அலுவலரின் 07.11.2017 நாளிட்ட அறிக்கை இம்முறைமன்ற நடுவத்தில் 10.11.2017ல் பெறப்பட்டு, மேற்படி அறிக்கை மீதான விவரங்கள் பெறப்பட்டும், விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டும் கீழ்க்கண்ட ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

கன்னியாகுமரி சிறப்பு நிலை பேரூராட்சி செயல் அலுவலரின் 07.11.2017 நாளிட்ட கடிதத்தில், கன்னியாகுமரி மாவட்டம், கன்னியாகுமரி சிறப்பு நிலை பேரூராட்சிக்குட்பட்ட காமரமாஜர் மணி மண்டபம் எதிரில் அமைந்துள்ள கழிப்பறை, நகரிய தங்கும் விடுதி மற்றும் அதன் அருகில் உள்ள உணவகம் ஆகியவற்றினை திரு.சங்கர்ராமன், என்பவர் 01.04.2012 முதல் 31.03.2015 வரை குத்தகைக்கு எடுத்து நடத்தி வந்ததாகவும், மீண்டும் 01.04.2015 முதல் 31.03.2018 வரை உள்ள காலத்திற்கு குத்தகையினை நீட்டித்து கேட்டு விண்ணப்பித்துள்ளதைத் தொடர்ந்து, கன்னியாகுமரி பேரூராட்சி மன்றத் தீர்மானம் எண்.638/நாள் 09.03.2015ன்படி திரு.சங்கரராமன் என்பவருக்கு நிலுவையாக உள்ள குத்தகை தொகையினை நிலுவையில்லாமல் செலுத்திய பின்னர், மேற்படி இனங்களை 15 சதவீதம் தொகை உயர்த்தி குத்தகையினை புதுப்பித்து வழங்கலாம் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாகவும், அதன்

பின்பும் மேற்படி திரு.சங்கரராமன் என்பவரால் குத்தகை நிலுவைத் தொகை செலுத்தப்படாத நிலையில் 31.03.2015க்கு பிறகு மேற்படி நபருக்கு குத்தகை நீட்டித்து வழங்கப்படவில்லையெனவும், மேலும் மேற்படி இனங்கள் 06.04.2015 அன்று பேரூராட்சி மூலம் வட்டாட்சியர் முன்னிலையில் சீல் வைக்கப்பட்டதாகவும், கன்னியாகுமரி பேரூராட்சியின் 01.02.2016 நாளிட்ட அறிவிப்பு வாயிலாக செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் மூலம் நாளிதழ்களில் மேற்படி இனங்கள் ஏலம் விடுவது தொடர்பாக அறிவிப்பு செய்யப்பட்டு, 16.02.2016ல் ஏலம் விடப்பட்டதாகவும், மேற்படி ஏல நடவடிக்கைகள் அனைத்தும் பேரூராட்சி மன்றத் தீர்மானத்தின்படி, உரிய வழிமுறைகளை பின்பற்றி மேற்கொள்ளப்பட்டதாகவும், மேலும் முன்னாள் குத்தகைதாரர் மீது, கன்னியாகுமரி மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவிலில் வழக்கு எண். O.S.No. 120/2017 நாள். 08.08.2017ன்படி குத்தகை நிலுவைத் தொகை செலுத்தக் கேட்டு வழக்கு தொடரப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்முறைமன்ற நடுவ 27.11.2017 நாளிட்ட அறிவிப்பாணையில் மேற்படி கன்னியாகுமரி பேரூராட்சிக்கு சொந்தமான இனங்களுக்கான குத்தகைக் காலம் 31.03.2015ல் முடிந்து விட்ட நிலையில், மேற்படி குத்தகை நிலுவையினை வசூலிக்க இரண்டு ஆண்டு காலமாக நடவடிக்கை மேற்கொள்ளாதது குறித்து விளக்கங்கள் கோரப்பட்டது.

கன்னியாகுமரி பேரூராட்சி செயல் அலுவலரின் 22.01.2018 நாளிட்ட கடிதம் மூலம் அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார்.

08.05.2018 நாளிட்ட அழைப்பாணையின்படி இம்முறைமன்ற நடுவத்தில் 19.06.2018ல் ஆஜரான கன்னியாகுமரி பேரூராட்சி செயல் அலுவலர், தனது வாக்குமூலத்தில் தான் 05.06.2017 முதல் கன்னியாகுமரி பேரூராட்சியில் செயல் அலுவலராக பணிபுரிவதாகவும், மேற்படி பேரூராட்சி சம்பந்தப்பட்ட குத்தகை நிலுவைத் தொடர்பாக 07.11.2017 மற்றும் 21.03.2018ல் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டதாகவும், திரு.சங்கரராமன் அவர்களால் கன்னியாகுமரி பேரூராட்சி கடற்கரை சாலையில் காமராஜர் மணிமண்டபம் எதிரில் உள்ள கட்டண கழிப்பறை, மற்றும் கன்னியாகுமரி மெயின் ரோட்டில் உள்ள தங்கும் விடுதி அதன் அருகாமையில் உள்ள உணவு விடுதி ஆகியவற்றை 01.04.2012 முதல் 31.03.2015 முடிய குத்தகைக்கு எடுத்ததாகவும், மீண்டும் 01.04.2015 முதல் 31.03.2018 வரை உள்ள கால கட்டத்திற்கு குத்தகை நீட்டிப்பு கேட்டதைத் தொடர்ந்து, மேற்படி குத்தகையை பரிசீலித்து பேரூராட்சி மன்றத் தீர்மான எண்.638/நாள் 09.03.2015ன்படி திரு.சங்கரராமன், தான் செலுத்த வேண்டிய குத்தகை நிலுவைத் தொகையினை செலுத்தியபின்னர், வழக்கமாக வழங்கப்படும் 15 சதவீத உயர்வில் குத்தகையினை வழங்கலாம் என்று மன்றத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாகவும், இது குறித்து குத்தகைதாரருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதாகவும், ஆனால் இது குறித்து பேரூராட்சியிலிருந்து கடிதம் அனுப்பப்பட்டதாக தெரியவில்லை எனவும் தெரிவித்துள்ளார். மேற்படி குத்தகைதாரர் பேரூராட்சியில் ஒப்பந்தக்காரராக பதிவு செய்து சில பணிகளை ஒப்பந்த அடிப்படையில் செய்துள்ளதாகவும், அதன்படி 2010–11 ஆண்டு பேரூராட்சி பொது நிதியின் கீழ் ரூ.7.95 லட்சம் மதிப்பீட்டில் பணியினை செய்ய 22.08.2011ல் பணி உத்திரவு வழங்கப்பட்டதாகவும், மேற்படி பணியினை செய்த குத்தகைதாரர்/ஒப்பந்தக்காரரிடமிருந்து மேற்படி பணிக்கான தொகையினை அவர் செலுத்தவேண்டிய நிலுவைத் தொகைக்காக பிடித்தம் செய்யப்பட்டதாகவும், திரு.சங்கரராமன் செலுத்தவேண்டிய நிலுவைத் தொகையினை ஈடு செய்யும் வகையில் பேரூராட்சி மூலம் நாகர்கோவில் மாவட்ட உரிமையியல் நீதி மன்றத்தில்

வழக்கு தொடரப்பட்டு, வழக்கு எண்.O.S.No.120/2017 28.06.2017ல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, 29.06.2017ல் வழக்கு பதிவு செய்யப்பட்டதாகவும், இதுவரை விசாரணைக்கு வரவில்லையெனவும், மேற்படி குத்தகைதாரர் செலுத்தவேண்டிய குத்தகை நிலுவைத் தொகை ரூ.46,46,080/– எனவும், இந்த வழக்கு 23.03.2018ல் முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதியிடமிருந்து கூடுதல் மாவட்ட நீதிபதி அவர்களுக்கு மாற்றப்பட்டதாகவும், மேற்படி தொகையினை செலுத்த குத்தகைதாரருக்கு 01.04.2015ல் கடிதம் எழுதப்பட்டதாகவும், மேற்படி நிலுவைத் தொகையினை செலுத்தாத நிலையில் 06.04.2015 பிற்பகல் 4.00 மணிக்கு மேற்குறிப்பிட்ட குத்தகை சொத்து, பூட்டி சீல் வைக்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார். அப்போது திரு.மாஹின் அபுபக்கர், என்பவர் செயல் அலுவலராக இருந்ததாகவும், 01.07.2017 முதல் இழப்பு ஏற்பட்டுள்ளதை கருத்தில் கொண்டு 01.07.2017 முதல் பணியாற்றிய செயல் அலுவலர்களின் விவரங்களை 15 நாட்களுக்குள் அனுப்பி வைப்பதாகவும், 2016–17ம் ஆண்டில் குத்தகை ஏலம் விடப்பட்டதில் ரூ.27,12,404/– ஏற்கனவே ஏலம் விடப்பட்டதை விட கூடுதலாக வரப்பெற்றுள்ளதாகவும், மேற்கண்ட மூன்று இடங்களில் நகரிய தங்கும் விடுதி (2014–15ல் ரூ.4,04,797/–ம்,) 2016–17ல் ரூ.17,25,009/–க்கு திரு. அருள்ராஜன் என்பவருக்கு ஏலம் விடப்பட்டதாகவும், உணவகம்( 2014--15ல் ரூ.10,476/–க்கு ஏலம் விடப்பட்டதில்,) 2016–17க்கு ரூ.3,50,000/–க்கு திரு.லிவிங்ஸ்டன் ஜேக்கப், என்பவருக்கு ஏலம் விடப்பட்டதாகவும், கடற்கரை சாலை கட்டணக் கழிப்பிடம் (2014–15ல் ரூ.3,23,883/–க்க ஏலம் விடப்பட்டதில்) 2016–17ல் ரூ.13,76,551/–க்கு திரு. பெருமாள் என்பவருக்கு ஏலம் விடப்பட்டதாகவும், எனவே 2014–15 ல் ஏலம் விடப்பட்டதை விட 2016–17ல் ரூ.27,12,404/– கூடுதலான தொகை பேரூராட்சிக்கு கிடைத்துள்ளதாகவும், கன்னியாகுமரி பேரூராட்சி செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

19.06.2018ல் இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான கன்னியாகுமரி பேரூராட்சி முன்னாள் செயல் அலுவலர் திரு ம.இராஜேந்திரன் தனது வாக்குமூலத்தில் தான் கன்னியாகுமரி பேரூராட்சியில் 07.05.2012 முதல் 19.10.2013 வரை செயல் அலுவலராக பணிபுரிந்ததாகவும், இரண்டு முறை திரு.சங்கரராமன், குத்தகைத்தாரருக்கு நிலுவைத் தொகை கட்டுமாறு அறிவிப்பு அனுப்பியதாகவும், இதனைத் தொடர்ந்து 10.04.2013ல் ரூ.1.00 லட்சமும், 16.04.2013ல் ரூ.1.50 லட்சமும் கட்டியுள்ளதாக தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

19.06.2018ல் இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான திரு.ந.அகஸ்திலிங்கம், கன்னியாகுமரி பேரூராட்சி முன்னாள் செயல் அலுவலர், தான் 05.11.2014 முதல் 18.03.2015 வரை கன்னியாகுமரி பேரூராட்சியின் கூடுதல் பொறுப்பில் இருந்ததாகவும், தனது பணிக்காலம் குறுகிய காலம் என்பதால் தான் எந்தவிதமான அறிவிப்பும் அனுப்பவில்லையெனவும், புகாரில் உள்ள குத்தகை பணம் ஏதும் வசூலிக்கவில்லை எனவும், தனது பணிக்காலத்தில் ஒப்பந்தம் ஏதும் செய்யப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

19.06.2018ல் இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான திரு.க.அம்புரோஸ், கன்னியாகுமரி பேரூராட்சி முன்னாள் செயல் அலுவலர், தான் கன்னியாகுமரி பேரூராட்சியில் 29.03.2012 முதல் 06.05.2012 வரை செயல் அலுவலராக பணிபுரிந்ததாகவும், மீண்டும் 19.10.2013 முதல் 17.10.2014 வரை கூடுதல் பொறுப்பில் இருந்ததாகவும், தன்னுடைய பணிக்காலத்தில் திரு.சங்கரராமன் குத்தகைதாரருக்கு 20.03.2014, 19.08.2014,மற்றும் 30.09.2014 ஆகிய தேதிகளில் அறிவிப்பு அனுப்பப்பட்டதாகவும், அதனைத் தொடர்ந்து மேற்படி குத்தகைதாரர் 7 தவணைகள்

கட்டியுள்ளதாகவும், அதிக தொகையாக ரூ.1,80,000/–, மற்றும் குறைந்த பட்ச தொகையாக ரூ.35,280/– செலுத்தியுள்ளதாகவும், அப்போது ரூ.6,07,280/– வசூலிக்கப்பட்டதாகவும், ஆனால் அப்போது இருந்த நிலுவைத் தொகை ரூ.25,02,931/– எனவும் அதில் மேற்குறிப்பிட்ட தொகை வசூலிக்கப்பட்டதாகவும், தனது பணிக்காலத்தில் குத்தகை காலம் நீட்டிக்கப்படவில்லை எனவும், 7 தவணைகளில் மொத்தம் ரூ.6,07,280/– வசூல் செய்யப்பட்டதாகவும், அப்போதிருந்த மாவட்ட ஆட்சியரிடம் நிலுவை விவரம் தெரிவிக்கப்பட்டதாகவும், மாவட்ட ஆட்சியரும் நிலுவைத் தொகையினை செலுத்த குத்தகைதாரரிடம் அறிவுறுத்தியாகவும் ஆனால் முழுத் தொகையும் செலுத்தவில்லை என தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

19.06.2018ல் இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான கன்னியாகுமரி பேரூராட்சி முன்னாள் செயல் அலுவலர் திரு.கே.முகைதீன் பிச்சை தான் 20.10.2014 முதல் 04.11.2014 வரை மேற்படி பேரூராட்சியில் சுகாதார அலுவலர் மற்றும் செயல் அலுவலர் கூடுதல் பொறுப்பில் இருந்ததாகவும், தான் 15 நாட்கள் மட்டுமே பணியில் இருந்ததால் ஒப்பந்தபுள்ளி எதுவும் கோராமலும், புகாரில் உள்ள நிலுவைத் தொகை ஏதும் வசூலிக்கவில்லை எனவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

28.06.2018 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அழைப்பாணையின்படி, 02.08.2018ல் இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான கன்னியாகுமரி பேரூராட்சி முன்னாள் செயல் அலுவலரும், தற்போதைய திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநருமான திரு.மு.மாஹின் அபுபக்கர், தனது வாக்குமூலத்தில் தான் 18.03.2015 முதல் 07.06.2016 வரை கன்னியாகுமரி பேரூராட்சி செயல் அலுவலராக பணிபுரிந்ததாகவும், மேற்படி பேரூராட்சிக்கு சொந்தமான காமராஜர் மணி மண்டபம் எதிரில் உள்ள கழிப்பறை, நகராட்சி தங்கும் விடுதி மற்றும் அதன் அருகில் உள்ள உணவகம் ஆகியவை திரு.சங்கராமன் என்பவருக்கு 01.04.2012 முதல் 31.03.2015 முடிய குத்தகைக்கு விடப்பட்டதாகவும், மேலும், 1997 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து திரு.சங்கரராமன் என்பவருக்கே மேலே குறிப்பிட்ட இனங்கள் குத்தகைக்கு விடப்பட்டதாகவும், 2006–07ம் ஆண்டு முதலே இவர் பேரூராட்சிக்கு செலுத்த வேண்டிய குத்தகை தொகை நிலுவையில் இருந்ததாகவும், நிலுவை தொகை இருக்கும்போது மீண்டும் அவருக்கு தொடர்ந்து குத்தகை நீட்டிப்பு வழங்கப்பட்டதாகவும், 18.03.2015ல் தான் பணியேற்றவுடன் பேரூராட்சி மன்றத் தீர்மானம் மூலம் நிலுவைத் தொகை கட்டி குத்தகை ஒப்பந்தத்தை புதுப்பித்துக் கொள்ள நோட்டீஸ் அனுப்பப்பட்டதாகவும், ஆனால் அவர் குத்தகை தொகை நிலுவையினை செலுத்தவில்லையெனவும், 01.04.2015ல் மேற்படி குத்தகைதாரருக்கு ஒரு அறிவிப்பு வழங்கப்பட்டதாகவும், 06.04.2015ல் மாவட்ட ஆட்சியரின் அனுமதி பெற்று மேற்படி மூன்று இடங்களுக்கும் சீல் வைக்கப்பட்டதாகவும், சீல் வைத்தவுடன் சென்னை உயர் நீதி மன்ற மதுரை கிளையில் சம்பந்தப்பட்ட நபர் வழக்கு தொடர்ந்து, மேற்படி வழக்கு பேரூராட்சிக்கு சாதகமாக தீர்ப்பு பெறப்பட்டடதாகவும், அரசு வழக்கறிஞரின் ஆலோசனை பெற்று அனைத்து இனங்களும் ஏலம் விடப்பட்டதாகவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். மேலும் மேற்கண்ட இனங்கள் தமது பணிக்காலத்தில் கீழ்க்கண்டவாறு குத்தகை விடப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

1.நகரிய தங்கும் விடுதி ரூ.17,25,009/– க்கு(பழைய ஏலத் தொகை ரு.4,04,797/–) திரு அருள்ராஜன் என்பவருக்கு உயர்ந்தபட்ச தொகைக்கு ஏலம் விடப்பட்டதாகவும்,

2.உணவகம் ரூ.3,50,000/–க்கு (பழைய ஏலத் தொகை ரூ.10,476/–) திரு லிவிங்ஸ்டன் ஜேக்கப் என்பவருக்கு ஏலம் விடப்பட்டதாகவும்,

3.கழிப்பறையின் புது ஏலத் தொகை ரூ.13,76,551/– (பழைய ஏலத் தொகை ரூ.3,23,883/–) திரு பெருமாள் என்பவருக்க ஏலம் விடப்பட்டதாகவும்,

ஏற்கனவே பேரூராட்சியால் தீர்மான எண்.638/நாள் 09.03.2015ன் மூலம் பழைய குத்தகைதாரருக்கு சாதகமாக போடப்பட்ட தீர்மானம், முன்னாள் மாவட்ட ஆட்சித் தலைவரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டு தீர்மானம் தடை செய்யப்பட்டதாகவும், நாகர்கோவில் உரிமையியல் நீதிமன்றத்தில் குத்தகை ஏல நிலுவை பணத்தை வசூல் செய்வதற்காக வழக்கு பதிவு செய்யப்பட்டதாகவும் (அசல் வழக்கு எண்.120/2017) ரூ.1,40,000/–முத்திரைக் கட்டணமாக செலுத்தி வழக்கு தொடரப்பட்டதாகவும், 07.08.2018ல் வழக்கு மீண்டும் விசாரணைக்கு வரவுள்ளதாகவும், பேரூராட்சி மன்றம் குத்தகைதாரருக்கு சாதகமாகவே செயல்பட்டதாகவும், தான் பணியில் சேர்ந்த பின்பு தான் இந்த நிலை சிரமப்பட்டு மாற்றப்பட்டதாகவும், தன்னால் புதியதாக ஏலம் விடப்பட்ட குத்தகை தொகை மேலே குறிப்பிட்டள்ளவாறு ஒரு ஆண்டிற்கு பேரூராட்சிக்கு மொத்தம் ரூ.27,12,404/– கூடுதல் வருவாயாக கிடைத்துள்ளது எனவும், தனது வாக்குமூலத்தில் கன்னியாகுமரி பேரூராட்சி முன்னாள் செயல் அலுவலரும் தற்போதைய திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரும் தெரிவித்துள்ளார்.

07.09.2018 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணையில் 01.04.2012 முதல் 31.03.2015 வரை குத்தகைத் தொகையினை முழுமையாக செலுத்தாததைத் தொடர்ந்து, கன்னியாகுமரி பேரூராட்சி மூலம் நாகர்கோவில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கு எண்.O.S.No.120/2017 ன் தற்போதைய நிலை குறித்து விவரம் கோரப்பட்டதைத் தொடந்து, கன்னியாகுமரி பேரூராட்சி செயல் அலுவலர் தனது 05.10.2018 நாளிட்ட கடிதத்தில் நாகர்கோவில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தொடரப்பட்டுள்ள வழக்கிற்கு பிரதிவாதியால் எதிர் உறுதி ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், அதனைத் தொடர்ந்து மேற்படி எதிர் உறுதி ஆவணத்திற்கான விளக்க அறிக்கை தயார் செய்யப்பட்டு அரசு வழக்கறிஞரிடம் சமர்ப்பிக்கப்பட்டு மேற்படி எதிர் வாதுரை அரசு வழக்கறிஞரால் 16.08.2018ல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நேர்வில் மேற்படி குத்தகை நிலுவைத் தொகை ரூ.46,46,080/–கீழ்க்கண்டுள்ளவாறு பேரூராட்சிக்கு வரவேண்டிய வருவாய் வசூலிக்கப்படாமல் உள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | நகராட்சி கட்டிடம் (துங்கும் விடுதி) (2006–07 முதல் 2014–15 வரை) | ரூ.38,19,294.00 |
| 2. | உணவு விடுதி (2006–07 முதல் 2014–15 வரை) | ரூ. 96,736.00 |
| 3. | கழிவறை குத்தகை. | ரூ. 7,30,080.00 |
| | **மொத்தம்.** | **ரூ.46,46,080.00** |

பேரூராட்சியால் இப்பொருள் தொடர்பாக நாகர்கோவில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ள நிலையில், 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 10(3) (b) ன்படி நீதிமன்றமொன்றின் முன் நிலுவையில் உள்ள பொருட்பாடு எதனையும் இம்முறைமன்ற நடுவம் விசாரித்திடலாகாது என்பதால் இது குறித்தான ஆணை எதுவும் இம்முறைமன்ற நடுவத்தால் வெளியிடப்படவில்லை. இருப்பினும் பேரூராட்சிக்கு வரவேண்டிய அதிகப்படியான இவ்வருவாய், நீண்ட காலமாக நிலுவையில்

உள்ளதால் நிர்வாக நலன் கருதி மேற்படி குத்தகை நிலுவைத் தொகையினை வருவாய் வசூல் சட்ட விதிகளின்படி வசூலிக்க அரசு வழக்கறிஞரின் கருத்துரை பெற்றும், தேவைப்படின் உரிய நீதிமன்ற ஆணை பெற்றும் தக்க நடவடிக்கை எடுக்கப்படலாமென இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது.

2018 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 17 –ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

–//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//–

செயலாளருக்காக.

பெறுநர்

1.செயல் அலுவலர்,
கன்னியாகுமரி சிறப்பு நிலை பேரூராட்சி,
கன்னியாகுமரி.

2.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
நாகர்கோவில் மண்டலம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
நாகர்கோவில்.

3.பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
குறளகம், சென்னை – 108.